ரிபோர்ட் ராமாயணம்

வ.ரா.

இன்றைக்கு அயோத்தியில் ஒரே குழப்பம். ராமன் முடிசூட்டு தடைப்பட்டு நின்ற காலத்தில்கூட, இவ்வளவு குழப்பம் இருக்க வில்லை.

ராமன் காட்டுக்குப் போன பின், அதிகமாக, விசேஷ மாறுதல் இல்லை அயோத்தியில் என்று சொல்லிக் கொண்டு, நாங்கள் படுத்துறங்கப் போனோம்.

இந்த தேசத்தில் குளிர் அதிகமானாலும், நாங்கள் பேசிக் கொண்டிருந்த காலத்தில், நிலவு பட்டப் பகலைப் போலக் காய்ந்து கொண்டிருந்தது. அயோத்தியின் சீத உஷ்ண ராப்பகலை வர்ணித்து டெலிபோன் பேசவா, நாம் இங்கு வந்திருக்கிறோம் என்று தமிழ்நாட்டுப் பத்திரிகை நிருபர்களைக் கேலி செய்வதுபோல, நிருபர் நண்பர் ஒருவர் குத்தலாகப் பேசினார்.

அபிப்பிராய பேதம் என்று நாங்கள் பல கூறுகளாகப் பிரிந்து தூங்குவது என்று ஏகமனதாய்த் தீர்மானித்தோம். என்றாலும், நண்பர் குத்தலாகச் சொன்னது எனக்குத் தூக்கம் வரவொட்டாமல் தடுத்து விட்டது.

சிருஷ்டி செய்

செய்தி அகப்படாமல் போனால், செய்தியை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ரிப்போர்ட்டர்களைச் சேர்ந்தது என்று பத்திரிகைத் தொழிலில் நிபுணர் ஒருவர் சொன்னது எனக்கு நினைவு வந்தது.

சிருஷ்டிப்பதற்கும் அல்ப நிகழ்ச்சியாவது ஆதாரமாக இருக்க வேண்டுமே என்று மனம் வாடிக் கொண்டிருந்த சமயம், சகோதர நிருபர்கள் புலி வேட்டை சிரமத்தால் கண்ணயர்ந்து போனார்கள். இதுதான் சமயமென்று செய்தி வேட்டைக்கு வெளியே கிளம்பினேன்.

நகரம் நிச்சப்தமாகவே யிருந்தது. சத்தமிருந்தால்தானே செய்தி கிடைக்கும்! யோசனையின்றி, ராஜபாட்டைகளை விட்டு விட்டு, சந்துகள் மார்க்கமாய்ச் சென்று கொண்டிருக்கையில், சத்தம்

கேட்டது. நடுநிசிச் சத்தத்திலே செய்தி கிடைக்காமல் போகாது என்று அடியை எட்டிப் போட்டேன்.

குடும்பச் சண்டை

வண்ணான் வீட்டிலே புருஷனுக்கும் பெண்சாதிக்கும் சண்டை. விளக்கு பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. இன்னொரு ஆண்பிள்ளை பக்கத்தில் உட்கார்ந்து சமாதானம் பண்ணிக் கொண்டிருந்தான். ஜன்னல் வழியாக ஒட்டுக் கேட்டேன்.

ராமன் செய்தது சரி என்றாள் பெண்சாதி. ராமன் முழுப் போக்கிரி என்றான் வண்ணான். முதல் தரமான செய்தி கிடைக்கு மென்று இன்னும் அதிகக் கவனத்துடன் ஒட்டுக் கேட்டேன்.

''நான் சொன்னதினால்தானே, உங்களுக்குள் சண்டை உண்டாயிருக்கிறது? நான் சொன்னது தப்பிதம். நான் வெளியே போகிறேன்,'' என்று வந்த விருந்தாளி சொன்னான். அவன் விருந்தாளிதான் என்று பின்னர் நிச்சயமாய்த் தெரிந்து கொண்டேன்.

பேராசை ராமன்

''ராமனைப் போலப் பேராசைப் பொறாமைக்காரன் பிறக்கப் போவதில்லை. பரதனைத் தொலைப்பதற்காக அல்லவா, ராமன் கீழ்ச் சாதி காட்டாள்களைப் பதவியில் உயர்த்தி, பலம் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறான். அயோத்தி அரண்மனையில் சீதா இருந் தால், எங்கு கெட்டுப் போய் விடுவாளோ என்று சந்தேகம் கொண்டு, தன் கூடக் கூட்டிக் கொண்டு போய் விட்டான். இப்பொழுது பார். அந்தக் காட்டு மனிதன் குகனை - பெயரைப் பார். குகன்! என்ன அழகு - துணை சேர்த்துக் கொள்ளப் பார்க்கி றான்!'' என்றான் வண்ணான்.

''ராமன் செய்ததெல்லாம் சரி. கீழ்ச்சாதியாவது மேல் ஜாதியாவது? ராமனுக்குச் சந்தேகமும் பொறாமையும் கிடையாது. சீதை தானாகவே, ராமனுடைய விருப்பத்தையும் மீறிக் காட்டுக்குப் போனாள் என்று அரண்மனை வேலைக்காரி என்னிடம் சொன் னாள். ராமனுக்கு ராஜ்ய ஆசையிருந்திருந்தால் சண்டை, பக்க பலம் ஒன்றுமில்லாமலே ராமனுக்கு ராஜ்யம் கிடைத்திருக்கும்!'' என்றாள் மனைவி.

படீர் படீர் அடி

''தடிச் செருக்கி! உனக்கு ராமன் பேரிலே ஆசை. அவன் வாட்ட சாட்டமாயிருக்கிறானோ இல்லையோ? பரமசிவனுடைய

வில்லை முறித்த தடியனல்லவா அவன்? அவன் பேரில் ஆசை வைத்துக் கொண்டு, என் வீட்டிலே எனக்குத் துரோகம் செய்யவா நீ இங்கு இருக்கிறாய்?'' என்று வண்ணான் அவளைப் பொத்துத் பொத்தென்று (அடி) சாத்தினான்.

''மூட்டை தூக்கி உனக்குத்தான் என் பேரில் சந்தேகம். நீ அல்பன். உன் வீட்டுக்கு என்னைக் கொண்டு வந்து கொடுத்தாளே அந்தப் பாவி (தாய்)! பரமாத்மா ராமன். ஒன்றும் சொல்லாதே. உன் நாக்கு புழுத்து, அழுகிப்போகும்!'' என்று பிலாக்கண ஒப்பாரியில் பிடித்துவிட்டாள்.

இந்த அவதியைப் பொறுக்க மாட்டாமல், விருந்தாளி வெளி யேறினான். சமயம் பார்த்து அவனை நான் பிடித்துக் கொண்டேன்.

விருந்தாளி சொன்னது

விருந்தாளி சொன்னதாவது: குகன் என்ற நிஷாத ராஜன் ஒருவன் இருக்கிறான். அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் தீண்டத் தகாதவர்கள். எங்கள் ஊருக்கும் அவனுடைய ராஜ்யத்துக்கும் நடுவே ஒரு ஆறு ஓடுகிறது. எங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள ஜாதி வித்தியாசத்தை உலகம் அறியும் பொருட்டே, கடவுள் இந்த நதியை, எங்களுக்கு நடுவே சிருஷ்டி செய்தாரோ, என்னவோ?

குகனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் தோணி (படகு) தள்ளும் தொழில். ராமன் அந்த ஆற்றைக் கடக்குமுன், குகனிடம் சில வார்த்தைகள் சொன்னான். நான் பக்கத்தில் நின்று ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். ராமன் சொன்னான்:-

''ஏ குகராஜனே! நீரும் நானும் அண்ணன் தம்பிகள். நீரும் உம்மைச் சேர்ந்தவர்களும் என்னை நெருங்குவதற்கு அஞ்சவேண் டாம். மண்ணில் உயர்வு தாழ்வு கிடையாது!'' குகன் மலைத்து நின்றான். அப்பொழுது அவனுக்கு ஆகார வேளை. பக்கத்திலே திறந்து வைத்திருந்த ஆகாரத்தில் ஒரு பிடி எடுத்து, ராமன் வாயில் போட்டுக் கொண்டான். நிஜம்தான். சத்தியமாய்ச் சொல்லுகிறேன். ராமனுடைய இந்த தந்திரத்தை அறியாமல், குகன் ஏமாந்து போய்ப் படகுக் காசுகூட வாங்காமல் படகைத் தள்ள எத்தனித்தான். படகு கொஞ்ச தூரம் போன பிறகு பரதன் வந்தால் - என்று ராமன் சொன்னது மட்டும் என் காதில் விழுந்தது. பரதன் வந்தால், படகு தள்ளாதே என்றுதான் ராமன் சொல்லியிருக்க வேண்டும். இந்தச் சேதியை எங்கள் இனத்தாரிடம், அயோத்தியில் சொல்ல வேண்டும் என்று குடல் தெறிக்க ஓடி வந்தேன். இந்தச் சேதியினாலேதான், எங்கள் மாமன் வீட்டிலே புருஷன் பெண்சாதிச் சண்டை.

விசுவாமித்திரனுடன் போட்டி

பக்கத்து வனத்திலே, சில தினங்களாக விசுவாமித்திரன் இருந்து வருவது எனக்குத் தெரியுமாதலால், பொழுது விடிவதற்கு முன் அவரைப் பேட்டி காண வேண்டுமென்பது என் விருப்பம். எப்படியோ தேடிப் பிடித்து, அவசர காரியமாதலால், அவருடைய நிஷ்டையைக் கலைத்துச் சேதியைச் சொன்னேன். அவர் சொன்ன தாவது:-

ராமன் ரொம்ப நல்ல பிள்ளை. குரு பக்தி கொண்ட சீஷன். என்னை அவன் மதிப்பதைப் போல, வசிஷ்டனை அவன் மதிப் பான் என்று நீர் நினைக்கிறீரா? வசிஷ்டன் போதனையைக் கேட்டு ராமன் வளர்ந்திருப்பானாகில், அவன் முழு மோசமாய்க் கெட்டுப் போயிருப்பான். (பொருத்தமில்லாத இந்தப் பேச்சினால், நான் சிறிது அலுத்துப் போய்த் தொண்டையைக் கனைத்துக் கொண் டேன்.)

விசுவாமித்திரன் சிரித்துவிட்டுச் சொல்லுகிறார்:- எனக்கு வசிஷ்டனிடம் துளிக்கூடப் பொறாமையில்லை. நடப்பு விஷயத் தைச் சொன்னேன். தான் சண்டாள குலத்தில் பிறந்தவன் என்ற ஞாபகமே யில்லாமல், ராஜகுரு என்ற பதவி பெற்றவுடனே, அந்த வசிஷ்டனுக்கு எவ்வளவு திமிர் உண்டாயிற்று? முட்டாள் தேவதைகள்! வசிஷ்டன் வாயால் சொன்னால்தான், நான் பிரம்ம ரிஷியாக முடியுமாம்! இன்னும் கூடக் கொஞ்சம் அகம்பாவம் ஏன் வசிஷ்டனுக்கு உண்டாகாது? ஓகோ! உமக்கு அவசரமோ? என் பெண் சகுந்தலை - எனக்கும் தாசி மேனகைக்கும் பிறந்த சகுந்தலை - க்ஷத்திரிய ஸ்திரீயாகி - துஷ்யந்தனுடைய பட்டமகிஷி பட்டம் அடைந்து, பரத சக்கரவர்த்தியைப் பெற்று வளர்த்த பொழுதே, இந்த தேசத்தில் ஜாதி தொலைந்து போய்விட்டதே! பாக்கியிருந்த துளி ஜாதி சந்தேகமும், நான் பிரம ரிஷியானதும் போய்விட்டதே! ஜாதிகள் ஏது? என் உபதேசத்தினாலே ராமன் குகனைச் சகோதரன் என்று அழைத்தான். பெருமை எனக்கு வந்தாலென்ன? என் சிஷ்யன் ராமனுக்கு வந்தாலென்ன?

வசிஷ்டனைக் கண்டேன்

இதற்குள் பொழுது விடிகிற நேரம் ஆகிவிட்டது. பிராதக் கால ஸ்னான சமயம். வசிஷ்டனை வழிமறித்துக் கொண்டேன். குகன் சேதியைச் சொன்னதும், அவர் அசைவற்று நின்றார். அவர் சொன்ன தாவது:- எனக்குத் தர்ம சங்கடம். என்னுடைய பூர்வோத்திரத் தினால் (பிறப்பு, வளர்ச்சி, கலியாணம் முதலியவைகளால்) எனக்கு

இந்த தர்ம சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. நான் சண்டாளர் வயிற்றில் பிறந்தவனென்றும் என் தர்ம பத்தினி அருந்ததி ஈனக் குலத்தவள் என்றும் ஒரு பழி எங்கள் பேரில் இருந்தது என்றும் இப்பொழுதும் ஒருவாறு இருக்கிறதென்றும் உமக்குத் தெரிந்திருக்கும்.

''ராஜ குரு என்ற பதவியை அடைந்த பின்னர்,' ராஜன் கோபத்துக்கு ஆளாக நேருமோ என்று பயந்து, ஜனங்கள் இந்த அவதூறை வாய்விட்டுப் பேசாமல் இருக்கிறார்கள். சில இடங் களில் முணுமுணுப்பு இருக்கலாம். உலகம் பலவிதம். உலகம் அப்படித்தானிருக்கும். அதை நொந்து கொள்ளுவதில் பயனில்லை. உலகத்தை நோவது அறியாமை. மகா தபஸ்வியான விசுவாமித்திர னுக்கே அர்த்தமில்லாமல் கோபமும் மனக் கசப்பும் கோணல் புத்தியும் ஏற்படுகிறபொழுது, சாமான்ய ஜனங்களைப் பற்றி நோவது பாவம். ஈசுவரனுக்குச் சம்மதமாயிருக்காது.

''கதையை வளர்ப்பானேன்? உண்மையும் ஸாத்வீகமும்தான் வாழ்க்கையின் உற்ற துணைகள். ராமன் மகாவீரன். தீனதயாளு; தர்மாத்மா; பித்ரு (தகப்பன்) வாக்ய பரிபாலன்; பொறுப்பு வாய்ந்த ராஜஸிம்மம்; உண்மையான கிருகஸ்தன் (குடும்பஸ்தன்); சகோதர விசுவாசி. ராமன் சாதாரண ராமன் அல்ல; அவன் பட்டாபிராமன். அவன் கௌஸல்யாராமன். அவன் மங்களமூர்த்தி. ராமன் இருந்த விடம் அயோத்தி. ஏ! ராமா! உன்னைவிட உலகத்துக்கு வேறு தெய்வமுண்டோ? ராமபத்ரா! நீ கண் கண்ட தெய்வமடா! உனக்கு என்னடாப்பா குறைவு? குகா! நீ பரம பாக்கியசாலி. ராமன் என் ஆசிரமத்தில், ஒரு கனிகூடப் புசித்ததில்லையடா! அப்பா! உன்னுடைய அதிருஷ்டத்தை நான் எவ்வாறு புகழ்வேன்! எவ்வாறு துதிப்பேன்!''

இவ்வாறு நான் இருப்பதையே மறந்து, வசிஷ்டன் பேசிக் கொண்டே போனார். அவருடைய குதூகலத்தில், ஆழம் தெரி யாமல், நானும் அமிழ்ந்து போனேன்.

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதீதபாவன சீதாராம்

என்று ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்து விட்டார். நானும் அவருடன் சேர்ந்து கூத்தாட ஆரம்பித்து விட்டேன். மீண்டும் நினைவு வந்ததும் வசிஷ்டர் பின் வருமாறு சொன்னார்:-

ராமன் வனவாச யாத்திரை செய்வதாக நீர் எண்ணிக் கொள்ள வேண்டாம். திவ்ய குண மங்கள ஸ்வரூபியான ஸ்ரீராமன், சீதா ராமன் தரும ஸ்தாபனத்தின் பொருட்டு திக் விஜயம் செய்து வருகிறான்.

அவன் தர்மராஜ்யத்தை ஸ்தாபித்து, பரிபாலனம் செய்ய, அவதாரம் செய்திருக்கிறான். அவன் எது செய்தாலும், தர்ம ஸ்தாபனத்தின் பொருட்டே. நீர் சீக்கிரமாய்ப் போய், கௌஸலையிடம் இந்த சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லும். தசரதன் மறைந்து, ராமன் காட்டுக்குப் போன பின்னர், கௌஸலைக்கு நித்திரையே கிடையாது. நீர் கூசாமல் கௌஸலையின் அந்தப்புரத்துக்குப் போகலாம். வேண்டுமானால், என்னுடைய யோக தண்டத்தை எடுத்துக் கொண்டு போவீரானால், அரண்மனையில் எங்கு செல்லு வதற்கும் உமக்குத் தடை ஏற்படாது.

கௌஸலை தேவிக்கு வணக்கம்

எதற்கும் முன் ஜாக்கிரதையுடன், வசிஷ்டனுடைய யோக தண்டத்தை எடுத்துக் கொண்டு கௌஸல்யா தேவியின் அந்தப் புரத்துக்குப் போனேன். நல்ல வேளை. யோக தண்டமில்லாவிடின், காவற்காரன் உள்ளே விட்டிருக்க மாட்டான். என்னைக் கைகேயி அந்தப்புர ஒற்றன் என்று சிறிது நேரம் சந்தேகித்திருப்பான் என்று தோன்றிற்று. யோக தண்டம்தான் எனக்கு ''கேட் பாஸ்'' (நுழைய அனுமதிச் சீட்டு).

கௌஸல்யா தேவியின் சன்னிதானம் அடைந்தேன். என்ன காட்சி! ராமன் படத்துக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு, ராமா, ராமா, ராமா என்று ஜபித்துக் கொண்டிருந்தாள். மங்களமூர்த்தியான ராமன் அவள் வயிற்றில் பிறக்கத்தான் தகும். வாரும் என்று பரிவுடன் என்னை உபசரித்தாள். குகன் சேதி கேட்டதும், ''லோகமாதா''வின் வடிவமாகத் திகழ்ந்த கௌஸல்யாதேவியின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் சில சொரிந்தன.

தேவி சொன்னாள்:- என் ராமன் அப்படிச் செய்ததில் எனக்கு ஆச்சரியமேயில்லை. பித்ரு வாக்ய பரிபாலனத்துக்காக, எந்தக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ளலாம் என்ற துணிவுடனே காட்டுக்குச் சென்ற என் ராமன் எந்த அவதூறுக்கும் அஞ்சமாட்டான். அவன் தர்ம ஸ்வரூபி. கைகேயி சபித்தாலென்ன? கூனி திட்டினாலென்ன? லோக ஜனங்கள் முணுமுணுத்தாலென்ன? ரொம்ப சந்தோஷம். வசிஷ்டரிடம் இந்தச் சந்தோஷச் சேதியைத் தெரிவித்தீரோ? பார்க்கவில்லையே. அந்த யோக தண்டம் வசிஷ்ட மகரிஷியுடையதாச்சே! நீர் அவரைக் கண்டிருக்கவேண்டும். அவர் என்ன சொன்னார்? ராமனை அவர் ஆசீர்வாதம் செய்திருப்பார். நீர் ஒன்றும் சொல்ல வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும்.

கூனியைச் சந்தித்தல்

தேவியினிடம் விடை பெற்றுக் கொண்டு, அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தேனோ இல்லையோ, யாரைச் சந்தித்தேன்? கூனி. கும்பிடப்போன கூனி குறுக்கே வந்து தோன்றினாள். எனக்கு பிரம்மானந்தம். ''கூனியம்மா! சௌக்கியமா?'' என்று கேட்டேன். அவளுக்கு நிமிர முடியவில்லை. ''யார்! கேட்ட குரல் மாதிரி இருக்கிறதே!'' என்றாள். ''நான் பாண்டிய முரசின் விசேஷ நிருபர்!'' என்றேன். ''வாருங்கள், ரொம்ப நாளாச்சு பார்த்து. ஏதாவது விசேஷமுண்டோ? விடியற்காலமே வந்திருக்கிறீர்கள். முக்கியமான சேதியிருக்கும்!'' என்றாள்.

வந்த சேதியைச் சொன்னேன். கூனிக்குத் தாங்க முடியாத ஆத்திரம். ''ராமன் சங்கதி எனக்கு அல்லவா தெரியும்? அவன் பொல்லா சூழ்ச்சிக்காரன். அவன் கொலை பாதகன். அவன் ப்ராத்ரு துரோகி (சகோதரனை வஞ்சிப்பவன்)! குகனைத் துணை சேர்த்துக் கொள்ளுகிறானா? பாதகனுடைய பராக்கிரமமும் கைகேயியின் சாகஸமும் கூனியின் புத்தி விசேஷமும் ராமனுக்கு என்ன தெரியும்?'' என்று சொல்லிக் கொண்டே, என்னைக், கைகேயியின் அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டு போனாள்.

கைகேயியின் ரௌத்திரம்

சேதி கேட்டதும் கைகேயி சீறி விழுந்தாள். ''ஏ கூனி! உனக்குப் புத்தியில்லை. விடியற்காலையிலே நல்ல சேதி கொண்டு வந்தாயோ? பத்திரிகை நிருபர்களுக்குத்தான் வேறு வேலை கிடையாது. குகனைச் சேர்த்துக் கொண்டு அந்த ராமன் என்ன செய்துவிட முடியும்? என் சகோதரர்கள் கேகய தேசத்து ராஜாக்கள் இறந்து விட்டார்களா? கைகேயி செத்துச் சாம்பலாய்ப் போய் விட்டாளா? சரி, நீர் போய் வரலாம்.''

இவ்வாறு கைகேயி ''நோட்டீஸ்'' கொடுத்ததினால் எனக்குத் துக்கம் உண்டாயிற்று. வாடின முகத்தோடு வெளியே போனேன். சுமந்திரர் மாளிகைக்குச் சென்றேன். அந்த நேரத்தில், மந்திரி சுமந்திரர் ராஜ்ய காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் என்றால் அவருடைய பொறுப்பை என்னவென்று சொல்லுவது?

சுமந்திரன்

இந்தச் சேதி கேட்டதும் சுமந்திரனுக்கு மகிழ்ச்சி. சுமந்திரன் சொன்னார் : ''ராமன் எவ்விடத்திலும் ராஜா! குடிகளின் திருப்தியே

அவருடைய திருப்தி. சகோதர பாவத்தை வளர்த்தாலொழிய, நாட்டில் கலகம் உண்டாகலாம் என்று ராமனுக்குத் தெரியும். ராமன் இணையற்ற ராஜ தந்திரி. இந்தச் சேதியை உங்கள் பத்திரிகையில் விஸ்தாரமாகப் பிரசுரம் செய்யுங்கள். வேலையதிகம். இன்னொரு சமயம் வாருங்கள்.''

பரதன் பரிவு

பரதன் இந்தச் சேதியைக் கேட்டதும், ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்தார். அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ராமன் இட்டது ஆணை என்று மெதுவாகச் சொன்னார்.

அதிகமாகப் பரதனைத் தொந்திரை செய்யலாகாது என்று விடைபெற்றுக் கொண்டு வெளியேறினேன்.

அயோத்தி நகரம் எங்கும் இதே பேச்சாயிருக்கிறது. பெண்கள் எல்லோருமே, ராமன் கட்சியை எடுத்துப் பேசுகிறார்கள். ஆண் பிள்ளைகள் பிரிந்து நிற்கிறார்கள். எங்கும் பரபரப்பு.

– 1934